# தி/மூ/இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக் கல்லூரி

**க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் – 01**

**தமிழ்மொழியும் இலக்கியமும் - I**

புள்ளி

**தரம்- 11**

**மாணவர் பெயர் …………………………….** **நேரம்- 1.00 மணி**

**கவனிக்க:**
**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும். 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1) ''விலங்கல் திண்தோள் கைவீரக் களிறு அனைய காளை இவன்'' இங்கு **விலங்கல்** என்பதன் பொருள்
   1. மலை 2.கடல் 3.யானை 4.வலிமை

2) ''நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்'' இங்கு **கன்னல்** என்பதன் பொருள்
   1. கன்னம் 2. கரும்பு 3. வயல் 4. நெல்

3) ''வள்ளுவன் குறள் ஓதற்கு எளிது'' இங்கு **எளிது** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. இலகு 2. தெளிவு 3. அரிது 4. சிறிது

4) ''பண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை....'' இங்கு **புல்லர்** என்பதற்குப் பொருத்தமற்ற விடையாக அமைவது
   1. அறிவிலார் 2. தீயவர் 3. இழிந்தவர் 4. அறிவாளி

5) ''பங்கப் பழனத்து உழும் உழவன்.....'' இங்கு **உழவன்** என்பதன் எதிர்பாற் சொல்
   1. உழத்தி 2. உழத்தினி 3. உழவி 4. உழவிச்சி

**பின்வரும் வினா ஒவ்வொன்றிற்க்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) வண்டி செலுத்துவோன் சாரதி என்பது போல விமானம் செலுத்துவோன்.
   1. மாலுமி 2. வலவன் 3. மீகாமன் 4. ஆயன்

7) ஆபரணம், பாத்திரம், கப்பல் என பலபொருளைக் குறிக்கும் ஒருசொல்
   1. இறை 2. படகு 3. வளை 4. கலம்

8) நெல்லின் உள்ளீடு அரிசி என்பது போல கற்றாளையின் உள்ளீடு.
   1. சுளை 2. பருப்பு 3. சோறு 4. சதை

9) வெதர் (Weather) என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்.
   1. பூகோளமயமாக்கல் 2. காலநிலை 3. வானிலை 4. ஆர்வம்

10) பின்வருவனவற்றுள் ஒல்லாந்தமொழிச் சொல்லாகஅமையாதது.
   1. துட்டு 2. தோப்பு 3. கக்கூஸ் 4. அலுமாரி

11) மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.
   1. ஐம்புலன் 2. ஐம்பொறி 3. ஐம்பூதம் 4. ஐந்திணை

12) உலக நடையறிந்து ஒழுகுதல்.
1. ஒப்புரவு 2. ஓம்படை 3. சிரஞ்சீவி 4. பொதுவியல்

13) ஒத்தபொருள் உள்ள இரு சொற்களால் அமைந்த இணைமொழி
1. அறம்மறம் 2. ஆதிஅந்தம் 3. தில்லுமுல்லு 4. கொஞ்சிக்குலாவ

14) மறுகா என்பது எப்பிரதேச வழக்குச் சொல்
1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு 4. தெற்கு

15) "ககரம்" வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1. கடல் 2. கப்பல் 3. கதவு 4. சுகம்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) பகைவரையும் பொறுக்கின்ற பண்பை விளக்கும் உவமைத் தொடர்
1. ஒருதாய் வயிற்றுப் பிள்ளை போல 2. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
3. நீறுபூத்த நெருப்புப் போல 4. குன்று முட்டிய குருவி போல

17) கேடுவிளைந்த பின்னர் அதனைத் தடுக்கமுயல்வது பயனற்றது என்னும் பொருள் தரும் பழமொழி
1. கண்கெட்டபின்னர் சூரியவணக்கம்
2. அணைகடந்தவெள்ளம் அழுதாலும் வராது
3. உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாகுமா?
4. வெள்ளம் வருமுன்னேஅணைகட்டவேண்டும்

18) தகுதி கண்டே உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தைத் தரும் பழமொழி
1. தருமம் தலை காக்கும் 2. இட்டுக் கெட்டார் எங்குமில்லை
3. பாத்திரமறிந்து பிச்சையிடு 4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

19) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இவ்வருடம் அதன் வைரவிழாவைக் கொண்டாடியது. வைரவிழா என்பது
1. 50 ஆண்டு நிறைவு விழா 2. 25 ஆண்டு நிறைவு விழா
2. 80 ஆண்டு நிறைவு விழா 4. 60 ஆண்டு நிறைவு விழா

20) "அவள் கலைவாணியே என்று நான் சத்தியம் செய்வேன்" என்பதில் வந்துள்ள எழுவாய்
1. அவள் 2. நான் 3. கலைவாணி 4. சத்தியம்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) தங்கத்தால் செய்த காப்பு. என்பதில் இடம் பெற்றுள்ள ஆல் எனும் வேற்றுமை உருபு உணர்த்தும் பொருள்
1. மூலப் பொருள் 2. காரணப் பொருள்
3. அடைமொழிப் பொருள் 4. கலப்புறு பொருள்

22) தட்டிக்கேள் என்பது
1. கூட்டுப்பெயர் 2. ஆக்கப்பெயர் 3. தனிவினை 4. கூட்டுவினை

23) தேன்மொழி பாடினாள் என்பது.
1. வினைத்தொகை 2. உவமைத்தொகை
3. பண்புத்தொகை 4. அன்மொழித்தொகை

24) “தேனருவி திரையெழுப்பி வானின் வழி ஒழுகும்.....” இதில் இடம்பெற்றுள்ள அணி
1.உயர்வுநவிற்சி 2. தற்குறிப்பேற்றம் 3. உவமையணி 4. உருவகம்

25) சிரித்த பங்கயம் என்பது
1. பெயரெச்சத்தொடர் 2. வினையெச்சத்தொடர்
3. வினைமுற்றுத்தொடர் 4. வேற்றுமைத்தொடர்

26) இயல்புப் புணர்ச்சியாக வராத சொல்
1. கடலலை 2. பாலாடை 3. மணல் வீடு 4. பலாவிலை

27) மேகங் கறுக்குது மின்னல் மின்னுது சாரல் அடிக்குது மழை வரப்போகுது என்பது
1. தனிவாக்கியம் 2. கலப்புவாக்கியம்
3. கூட்டுவாக்கியம் 3. தொடர் வாக்கியம்

28) எதிர்மறை வினையெச்சமாய் வருவது.
1. உண்டான் 2. அழுத 3. எழுதாது 4. சிரித்த

29) கண்டான் என்பதன் பகுதி
1. கண் 2. காண் 3. கண்ட 4. கண்டு

30) காரணப் பொதுப் பெயராக அமைவது
1. பறவை 2. மயில் 3. சங்கு 4. வளை

**பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.**

31) நாளுக்கு நாள் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. அவற்றுள் முக்கியமானவை பாதசாரிகள் மஞ்சள் கோட்டில் கடக்காமை, சாரதிகள் மது அருந்தி வாகனத்தை செலுத்துதல், வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை போன்றனவாகும்.
1. பாதசாரிகள் மஞ்சள் கோட்டில் வீதியைக் கடக்காமை.
2. வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை.
3. வீதி விபத்துக்கான காரணங்கள்.
4. சாரதிகள் மது அருந்தி வாகனத்தைச் செலுத்துகின்றமை.

32) அரிய பாக்களைப் பாடி அன்று மொழிவளர்த்தவர்கள் அருந்தமிழ்ப் புலவர்களே. எனினும் உண்மையில் தமிழ் வளர்த்தோர் அப் புலவர்களுக்கு பொருள் அளித்துப் பேணியவர் புரவலர்களே ஆவர்.
1. மொழி வளர்த்தோர் புலவர்கள்
2. புலவர்கள் அரிய பாக்களைப் பாடினர்
3. புலவர்களுக்கு பொருள் அளித்தவர்கள் புரவலர்கள்
4. தமிழை வளர்த்தவர்கள் புரவலர்கள்

**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

33) காட்டில் உலாவும் மான்களின் கூட்டம்
1. அழகுடையனவாய் இருந்தது 2. அழகுடையனவாய் இருந்தன
3. அழகுடையதாய் இருந்தது 4. அழகுடையதாய் இருந்தன.

34) நீ நன்றாகப் படித்தாலன்றி பரீட்சையில்
   1. சித்தியடைவாய்
   2. சித்தியடையமாட்டாய்
   3. சித்தியடைந்திருப்பாய்
   4. சித்தியுற்றாய்

35) மூர்க்கனும் முதலையும் கொண்டது
   1. விடும்  2. விடாது  3. விடா  4. விட்டது

**பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

36) 1. எல்லா வீடுகளும் அழகானது.
   2. நன்றி மறப்பது நன்றல்ல.
   3. கலாச்சார நிகழ்வுகள் இடம் பெற்றன.
   4. குமரன் சுகவீனம் காரணமாகப் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37) இன்றைய உலகில் போதைப் பொருட்களால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி இளைஞர் மத்தியில்..................................... மேற்கொள்ளப்பட வேண்டும்.
   1. பிரசுரம்  2. பிரசாரம்  3. பிரகாரம்  4. பிரகடனம்

38) கல்வி அமைச்சினால் தமிழ்த்தினப் போட்டிக்கான ........................பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
   1. வர்த்தமானி  2. அறிக்கை  3. உடன்படிக்கை  4. சுற்றுநிருபம்

39) தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆகி தமிழில் வழங்குபவை .......................................... எனப்படும்
   1. தற்சமம்  2. தற்பவம்  3. மரூஉ  4. இடக்கரடக்கல்

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) ஒரு துறையில் அறிவும் அனுபவமும் உள்ளவர்களிடம் தகவல்களைப் பெறுவதே செவ்விகாணலின் நோக்கமாகும்.
ஆ) பொதுசனத் தொடர்பு சாதனங்களில் இன்று செவ்விகாணல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.
இ) உரையாடல், கலந்துரையாடல் என்பவற்றினின்றும் வேறுபட்டதென அறியலாம்.
ஈ) செவ்வியின் மூலம் பல்வேறு தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
உ) விமர்சன ரீதியான அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

   1. அ,ஆ,ஈ,இ,உ  2. அ,ஆ,உ,இ,  3. ஆ,அ,ஈ,உ,இ  4. ஆ,அ,இ,ஈ,உ

**(40 புள்ளிகள்)**